DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

| | |
|---|---|
| Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **CC No.20/2024** |
| Deposition of witness for | Prosecution **PW - 1**<br>Deffence<br>Court |

Name : **திரு.ரவி**
Father's Name : திரு.
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.08.2025.

**(எதிரி ஆஜர்.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மசினகுடியில் குடியிருந்து கொண்டு BSNL -ல் Telephone Mechanic ஆக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.12.2023 அன்று 01.30 மணிக்கு தேவர்சோலை BSNL Exchange Store-ல் இருந்து கேபிள், ஆங்கிள், சில இரும்பு பொருட்கள் காணாமல் போயிருந்தது. 25.12.2023 அன்று ராஜு என்பவர் எனக்கு

போன் மூலம் BSNL Exchange -ன் பூட்டுகள் உடைந்திருப்பதாகவும் கூறினார். நானும், JTO தனஜெயன் என்பவரும் தேவர்சோலை Exchange -க்கு சென்று பார்த்தபோது. Exchange னுள் எல்லாம் சரியாக இருந்தது. ஸ்டோர் ரூமில் கேபில், ஆங்கிள், இரும்பு பொருட்கள் காணாமல் போயிருந்தது.

2. காணாமல் போன பொருட்களின் மதிப்பு ரூ.3,000/- இருக்கும். நானும், JTO தனஜெயனும் காவல் நிலையம் சென்று இதுகுறித்து புகார் அளித்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான், அத்ந புகார் நான் கொடுத்தது தான். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்).** போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் காணாமல் போன பொருட்கள் திரும்ப கிடைத்துவிட்டதாக தகவல் கூறியதன் பேரில் காவல் நிலையம் சென்று அடையாளம் காண்பித்தோம். அன்றைய தினம் போலீசார் என்னை மறு விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :

1. மேற்படி BSNL Store Room காவல் நிலையத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். அங்கு மின்விளக்கு, வெளிச்சம் தெளிவாக இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் Store-ல் வைத்திருக்கும பொருக்கு Inventory வைத்துள்ளோமா என்றால் இருக்கிறது. புகார் நான் தான் எழுதி கையொப்பம் செய்தேன்.

2. இந்த வழக்கு போலீசாரால் புனையப்பட்ட வழக்கு என்றாலும், போலீசுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது Store -ல் நீண்ட நாட்களாக ஒரு பூட்டு இல்லாமல் இருந்தது அது சம்பந்தமாக நாங்கள் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றோம் என்றால் சரியல்ல.

3. உண்மையிலேயே பொருட்கள் காணாமல்போயிருந்தால் புகாரில் காணாமல் போன பொருட்களை குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்றாலும், பொருட்கள் காணாமல் போகாததால் தான் புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. Inventory பதிவேட்டை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் CCTV கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். எங்களது அலுவலகத்தில் CCTV கேமரா இல்லை.

4. ஒரு வண்டியை ஒரு இடத்தில் இருந்து எடுத்துச்செல்ல வேண்டும் என்றால் பல CCTV கேமராக்களை கடந்து தான் செல்லவேண்டும் என்றால் சரியல்ல. காவல் நிலையம் அருகிலேயே இருப்பதால், சம்பவம் உண்மையில் நடைபெற்றிருந்தால் அன்றைய தினமே புகார் கொடுத்திருப்போம் என்றாலும், சம்பவம் நடைபெறாததால் தான் மறுநாள் புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல, சம்பவம் இரவு 01.30 மணிக்கு நடந்தது அதை மறுநாள் தான் பார்த்தார்கள், அதன்பின்பு புகார் கொடுத்தோம்.

5. போலீசார் பிடித்து வைத்திருந்த நபரின் மீது போலீசார் கட்டாயப்படுத்தி என்னிடம் புகார் பெற்றார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

Sd/- G.SARAVANAKUMAR, B.A., B.L., (HON'S)
**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**